ஆஸ்பத்திரியில் ஆக்சிடென்ட் வார்ட் கிடையாது. ஏலக்காய் வாரியத்தில் இருந்து சுமார் 3 லட்சம் ரூபாய்வரை, கட்டடம் கட்டுவதற்கு, ஆக்சிடென்ட் வார்ட் கட்டுவதற்குத் தரத் தயாராக உள்ளார்கள். எனவே இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கம்பம் அரசாங்கம் மருத்துவமனையில் ஆக்சிடென்ட் வார்ட் ஒன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏழை மக்களின் நல்வாழ்விற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் இந்த நிதிநிலை அறிக்கை என்று கூறிக்கொண்டு, பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24—3—1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. 1985-86 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

39. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 எ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்)

1987 மார்ச் 23]

40. 1985-86 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

41. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

42. 1985-86 ஆம் ஆண்டிற்கான சேரன் பொறியியற் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

43. 1985-86 ஆம் ஆண்டிற்கான சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை, (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] . (தமிழ், ஆங்கிலம்).

44. 1985-86 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. 1986-87 ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9 11, 44 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் திருத்த மதிப்பீடுகள்.

21. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 மற்றும் 13 முதல் 16 வரையிலான விரிவான திருத்த மதிப்பீடுகள்.

22. 1986-87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6 மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான திருத்த மதிப்பீடுகள்.